# நெல்லிக்குப்பம் நகராட்சி

## நகர் மன்றக் கூட்டம் நிகழ்ச்சி நிரல்

2018–ம் ஆண்டு மார்ச் மாதம் 28–ம் தேதி புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற உள்ள நகர் மன்றத்தின் சாதாரண கூட்டத்தில் முடிவு செய்யப்படவுள்ள மன்றப்பொருள்கள் விபரம்.

முன்னிலை : – திரு. எஸ்.மகாராஜன்
தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி.

**மன்றபொருள்.1.** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் வசிக்கும் சுமார் 47000க்கும் அதிகமான மக்களால் தினமும் 19 மெட்ரிக் டன் அளவிற்கு திடக்கழிவுகள் உற்பத்தியாகிறது. இத்திடக்கழிவுகள் தற்பொழுது 2.16 ஏக்கர் பரப்பளவு உள்ள ஆரோக்கியசாமி தெருவில் உள்ள உரக்கிடங்கில் கொட்டப்பட்டு வருகின்றது. மற்றொரு 3.02 ஏக்கர் பரப்பளவு உள்ள மேல்பாதி உரக்கிடங்கு பொது மக்கள் எதிர்ப்பு காரணமாக கடந்த 9 வருடகாலமாக பயன்படுத்தப்படாமல் உள்ளது. தற்பொழுது தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 85 தள்ளுவண்டிகள் ( PUSH CARTS) வாங்கப்பட்டு, நகரில் உள்ள சுமார் 80% வீடுகளில் நேரிடையாக குப்பைகள் சேகரம் செய்யப்படுகிறது. மேலும் குப்பைகள் மக்கும் மற்றும் மக்காத குப்பைகள் தரம் பிரித்தும் வாங்கப்படுகிறது. நகரில் உருவாகும் திடக்கழிவுகளில் எரியக்கூடிய தன்மையுடைய சுமார் 24% திடக்கழிவுகளான பிளாஸ்டிக், ரப்பர், பிளாஸ்டிக் பாட்டில்கள், துணிகள், தேங்காய் ஓடுகள் மற்றும் மரங்கள் ஆகியவற்றினை கையாளுவதிலும் மேலும் அப்புறப்படுத்துவதிலும் சிரமங்கள் ஏற்படுகின்றன. இவ்வற்றினை பாதுகாப்பாக கையாண்டு வெளியேற்றுவதற்கான வழிமுறைகள் குறித்து கடலூர் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுடன் கலந்து ஆலோசித்தபோது, மேற்கண்ட எரியகூடிய தன்மை வாய்த்த திடக்கழிவுகளை அரியலூர் மாவட்டத்தில் உள்ள அல்ட்ரா–டெக் சிமெண்ட் தொழிற்சாலையில் எரிபொருட்களாக பயன்படுத்தி வருவதால், அந்நிறுவனத்துடன் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்கலாம் என தெரிவித்தார். இதன் அடிப்படையில், மேற்கண்ட சிமெண்ட் தொழிற்சாலையில் எரியக்கூடிய தன்மை வாய்ந்த திடக்கழிவுகள் எவ்விதம் பயன்படுத்தப்படுகின்றது என்பதை மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் மற்றும் கடலூர் மாவட்டத்தில் இதர நகராட்சிகளான கடலூர், சிதம்பரம், விருத்தாசலம் மற்றும் பண்ணுருட்டி நகராட்சி ஆணையர்கள், பொறியாளர்கள் மற்றும் சுகாதார அலுவலர்களுடன் 16.03.2018 அன்று பார்வையிட்டு, மேற்கண்ட எரியக்கூடிய திடக்கழிவுகள் பாதுகாப்பாக சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு எரிபொருளாக மேற்கண்ட சிமெண்ட் தொழிற்சாலையில் பயன்படுத்துவது அறியப்பட்டது.

மேற்கண்ட சிமெண்ட் தொழிற்சாலை நிர்வாகத்தினர், நாளொன்றுக்கு 250MT எரியக்கூடிய திடக்கழிவுகளை கையாளக்கூடிய அளவில் திறன் இருப்பதாகவும், இது சம்மந்தமாக அந்த நிறுவனத்துடன் 10 ஆண்டு காலத்திற்கு எரியக்கூடிய திடக்கழிவுகளை வழங்குவதற்கு சம்மந்தப்பட்ட நகராட்சி புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டால், தாங்களே வந்து நகராட்சியால் குறிப்பிடுகின்ற இடத்தில் உள்ள எரியக்கூடிய திடக்கழிவுகளை ஏற்றிச் செல்வதற்கு வாகனங்களை அனுப்பி வைப்பதாகவும், இத்திடக்கழிவு நகராட்சியின் செலவில் வாகனங்களில் ஏற்றிடவேண்டும் எனவும், மேற்கண்ட எரிய கூடிய திடக்கழிவுகளை நகராட்சி இலவசமாக தரவேண்டும் என்கிற நிபந்தனைகளையும் தெரிவித்தனார். இது சம்மந்தமாக மாதிரி புரிந்துணர்வு ஒப்பந்த உடன்படிக்கையும் கொடுத்துள்ளனர்.

நெல்லிக்குப்பம் நகராட்சியில் நாளொன்றுக்கு உற்பத்தியாகும் திடக்கழிவுகளில் நகரில் எரியக்கூடிய தன்மையுடைய 4.50 மெட்ரிக் டன் திடக்கழிவுகளை கையாளுவதும், அவற்றிணை பாதுகாப்பாக வெளியேற்றுதிலும் பல்வேறு சிரமங்கள் உள்ளன. எனவே, அவற்றினை பாதுகாப்பாக வெளியேற்றிட மேற்கண்ட சிமெண்ட் தொழிற்சாலை நிர்வாகத்துடன் 10 ஆண்டு காலத்திற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தி கொள்ளவும், விலை ஏதும் இல்லாமல் இலவசமாக இத்திடக்கழிவுகளை இந்நிறுவனத்திற்கு வழங்குவதற்கும் நகராட்சி நிர்வாக ஆணையர் அனுமதி பெற்று நடவடிக்கை எடுத்திட மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அ.கு:- இந்நகராட்சியில் உற்பத்தியாகும் திடக்கழிவுகளில் எரியக்கூடிய தன்மை வாய்ந்த மற்றும் மக்கும் தன்மையில்லாத திடக்கழிவுகளை, அரியலூர், அல்ட்ரா–டெக் சிமெண்ட் நிறுவனத்திற்கு இவற்றினை கையாண்டு வெளியேற்றுவதற்கு உள்ள சிரமங்களை கருத்தில் கொண்டு இலவசமாக வழங்கிடவும், இதற்கென 10 ஆண்டு காலத்திற்கு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை இந்நிறுவனத்துடன் செய்து கொள்ளவும். நகராட்சி நிர்வாக ஆணையரிடம் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

(ந.க.எண்.1372/2018/H1)

**<u>மன்றபொருள் .2.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட அரசு கல்வி நிறுவனங்கள் , நகராட்சி அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்கள் ( சுயநிதி பாடப்பிரிவுகளுக்கான கட்டிடங்கள் தவிர்த்து ) மற்றும் அவை சம்மந்தப்பட்ட விடுதிகள் , நூலகங்கள் தவிர அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் சொத்துவரி விதிக்கப்பட வேண்டும் என தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் , பதிவிற்கும் வைக்கப்படுகிறது. மேலும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 , பிரிவு 78 (3) ன் படி , ஆட்சேபனைகளை அளிப்பதற்காக ஒரு தமிழ் நாளிதழில் அறிவிப்பு வெளியிடுவதற்கும் மற்றும் அலுவலக அறிவிப்பு பலகையில் ஒட்டி அறிவிப்பு செய்வதற்கும் , இதற்காகும் செலவினத்திற்கும் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-1.மன்றம் பதிவு செய்யலாம்.
2.தமிழ் நாளிதழில் வெளியிடுவதற்கும் , அதற்காகும் செலவினத்திற்கும் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1287/2018/அ1)

**<u>மன்றபொருள் .3</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி குடிநீர் நிதியில் நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் அவசர அவசியம் கருதி அலுவலக வளாகத்தில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியில் உள்ள பழுதடைந்த 250 mm CI sluice valve புதியதாக வாங்கி பொருத்தியதற்கு ரூ.27627/– Sri Devi Industries , சென்னை அவர்களுக்கு வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் , பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண். 1378/2018/இ1)

**<u>மன்றபொருள் .4.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சியில் குடிநீர் நிதியில் தனி அலுவலரின் முன் அனுமதியின் படி அவசர அவசியம் கருதி ஒப்படைப்பு பணியாக மேல்பாதி அம்பேத்கார் நகர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி போர்வெல் மோட்டார் 12.5 HP கேபில் புதியதாக மாற்றி பொருத்தியதற்கு திருமதி. எஸ். பரிமளா , ஒப்பந்ததாரர் அவர்களுக்கு ரூ. 20000/– ஆயிரம் வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் , பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண். 1377/2018/இ1)

**<u>மன்றபொருள் .5.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி அலுவலக ஜெராக்ஸ் மிஷன் திடீரென்று பழுது ஏற்பட்டு இயங்காமல் உள்ளதை அவசர அவசியம் கருதியும் , தேர்தல் வார்டு மறு வரையறை பணிக்காக ஜெராக்ஸ் அதிகமாக எடுக்க வேண்டியிருந்ததால் உடனடியாக பழுது பார்க்கப்பட்டு Fixing Film Assembly மற்றும் Gear மாற்றியதற்கு அங்கீகரிக்கப்பட்ட டீலர் Excite Inc , புதுச்சேரி அவர்களுக்கு ரூ. 11150/– ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம் .

(ந.க.எண். 0993/2018/இ1)

**<u>மன்றபொருள் .6.</u>** சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் நகரத்தில் உள்ள அனைத்து வார்டுகளும் திறந்தவெளி கழிப்பிடமற்ற வார்டுகளாக உருவாக்கி திறந்தவெளி கழிப்பிடமற்ற நகராட்சி என அறிவிப்பு செய்திட பலவிதமான நடவடிக்கைகள் எடுத்து வரும் நிலையில் , நகராட்சி பகுதியில் மீண்டும் ஒரு சரியான முறையில் கழிப்பிடமற்ற வீடுகளை கணக்கெடுப்பு செய்திடவும் அறிவுரை

வழங்கியுள்ளனர்.அதன்படி நகர் பகுதிகளில் கணக்கெடுப்பு செய்யப்பட்டு தனி நபர் கழிப்பறை இல்லாத வீடுகளுக்கு தனி நபர் கழிப்பறை கட்டும் பணி மேற்கொள்ள அதற்கான கணக்கெடுப்பு படிவம் நகல் (Xerox) செய்த வகைக்கு ரூ.3850/– மட்டும் தூய்மை இந்தியா திட்டம் மேற்பார்வையாளர் திரு.பிரசாத் அவர்களால் வழங்கப்பட்டது. எனவே திரு.பிரசாத் அவர்களுக்கு பட்டியல் தொகை IEC நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :- மன்றம் அனுமதிக்கலாம் .

(ந.க.எண். 2438/2015/இ2)

**<u>மன்றபொருள் .7.</u>** பொது சுகாதாரம் நெல்லிக்குப்பம் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் முதல் நிலை சேகரிப்பு மற்றும் இரண்டாம் நிலையாக குப்பைகளை உரக்கிடங்கிற்கு கொண்டு செல்லும் பணிகளுக்கு 30 வார்டுகளில் மனித சக்தி ( Man power) யை வழங்க துப்புரவு பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையரகத்தின் அனுமதி பெற்று தனியார் மூலம் மனித சக்தியை பெற ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளதாலும் இப் பணிகளை செய்து வரும் ஒப்பந்த நிறுவனத்தின் பணிக்காலம் 31.12.2017 முடிவடைய உள்ள காரணத்தாலும் திடக்கழிவு மேலாண்மை மற்றும் பொது சுகாதார அத்தியாவசியத்தணை கருத்தில் கொண்டு 01.01.2018 முதல் ஒப்பந்தப் புள்ளி இறுதி செய்கின்ற காலம் வரை விவேகானந்தர் மகளிர் சுய உதவிக்குழு மூலம் கடலூர் , மாவட்ட ஆட்சியரின் சுகாதார பணியாளர்களுக்கான தினக்கூலி விகிதத்தில் (M2/14889/2017 நாள். 27.07.2017) ஜனவரி 01.01.2018 முதல் 31.01.2018 வரை மற்றும் 01.02.2018 முதல் 28.02.2018 வரை சுகாதார பணியாளர்களை கொண்டு திடக்கழிவு மேலாண்மை பணி மேற்கொள்ளப்பட்டதற்கு கீழ் கண்டவாறு தொகை வழங்கபட்டதை மன்றத்தின் பார்வைக்கும் , பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| ஜனவரி . 2018 (01.01.2018 முதல் 31.01.2018) | = | ரூ. 359700/– |
| பிப்ரலரி . 2018 (01.02.2018 முதல் 28.02.2018 ) | = | <u>ரூ. 350790/–</u> |
| மொத்த தொகை | = | ரூ. <u>710490/–</u> |

(ந.க.எண். 2852/2012/எச்1)

**<u>மன்றபொருள் .8.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு ஒகி புயல் மற்றும் இடைவிடாத மழை – 2017 நிதியின் கீழ் நகராட்சி நிர்வாக ஆணையர் , சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண். 29074/2017/இ2 நாள். 13.03.2018 ல் பழுதடைந்த சாலைகளை தற்காலிகமாக சரி செய்ய ரூ. 2,40,000/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக கீழ் கண்ட சேதம் அடைந்த சாலை பகுதிகளை சரி செய்ய தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ. 2,40,000/– க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1. வான்பாக்கம் மெயின் ரொடு , கைலாசநாதர் கோயில் தெருவில் இருந்து ஸ்விட் சிட்டி வரையும் திருகண்டேஸ்வரம் மெயின் ரோடு பள்ளியில் இருந்து வார்டு எல்லை வரையும் , முள்ளிகிராம்பட்டு ரோடு காவலர் குடியிருப்பில் இருந்து கருமகாரிய கொட்டகை வரையும் சேதம் அடைந்த இடங்களை சரி செய்யும் பணி .

**அலுவலக குறிப்பு** :- மன்றம் அனுமதிக்கலாம் .

(ந.க.எண். 1420/2018/இ1)

**<u>மன்றபொருள் .9.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு திடக்கழிவு மேலாண்மை பணிக்கு மனித சக்தி வழங்குதல் சம்மந்தமான பணி குறித்து சென்னை உயர்நீதி மன்றத்தில் செயலாளர் , Nellikuppam Agro Enggineering Service Co–Operative Ltd , E 2739 , கம்பர் நகர் , வாழப்பட்டு , நெல்லிக்குப்பம் , கடலூர் மாவட்டம் அவர்கள் வழக்கு தொடர்ந்துள்ளார். மேன்மை மிகு சென்னை உயர்நீதி மன்ற வழக்கு W.P NO . 3229/2018 , W.M.P NO. 3962/2018 வழக்கிற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் , நகராட்சி நிர்வாக ஆணையரகம் , சென்னை , தலைமை செயலாளர் , நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை , தலைமை செயலகம் , சென்னை மற்றும் ஆணையாளர் , நெல்லிக்குப்பம் நகராட்சி அவர்கள் சார்பாக ஆஜராவதற்கு பட்டியல் தொகை சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞர் திரு. A . குமார் (Additional

Advocate General of Tamilnadu ,Ltr. No. SB/FB.No. 1/2018 dated. 06.03.2018 ) அவர்களுக்கு ரூ. **50000/–** , திரு .சூரிய நாராயணன் (Additional Government Pleader) அவர்களுக்கு ரூ. **16667/–** மற்றும் திரு . S.N.சுப்பரமணி (அரசு வழக்கறிஞர்) அவர்களுக்கு ரூ. **10000/–** ம் வழங்கியதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு: 1.</u>** முன்றம் அனுமதிக்கலாம்.

2. அவசரம் அவசியம் கருதி நகரமன்ற அனுமதியை எதிர் நோக்கி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண் . 3705/2017/இ1

**<u>மன்றபொருள் .10.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.3ல் உள்ள அப்துல் ரஹ்மான் நகரில் சுமார் 60 க்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளது. மேற்படி பகுதியில் உள்ள வீட்டு உரிமையாளர்கள் அனைவரும் நகராட்சிக்கு வீட்டு வரி செலுத்தி வருகிறார்கள். மேலும் அப்பகுதியில் பொதுமக்கள் குடிநீர் உபயோகத்திற்கு வீட்டிற்கு குடிநீர் இணைப்பு பெற அப்பகுதியில் தண்ணீர் செல்லும் பகீர்மான குழாய் இல்லை. மேற்படி பகுதியில் உள்ள வீட்டு உரிமையாளர்கள் 25 நபர்கள் புதிய குடிநீர் குழாய் இணைப்புக்காக வைப்புத் தொகை மற்றும் வீட்டு வரி அனைத்தையும் செலுத்தி விட்டனர். அப்பகுதியில் உள்ள வீட்டு உரிமையாளர்கள் தங்கள் சொந்த செலவில் மெயின் குழாய் அமைத்து விட்டு இணைப்பு பெற்றுகொள்வதாக கூறியுள்ளார்கள். நகரமைப்பு ஆய்வரும் மேற்கண்ட நகரில் 51 மனைகள் அரசாணையின்படி முறைபடுத்தி அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக தனது குறிப்பில் தெரிவித்துள்ளார். எனவே அப்பகுதி பொதுமக்கள் நலன் கருதியும், குடிநீர் விநியோக அவசரம் அவசியம் கருதியும் அப்பகுதியில் குடிநீர் விநியோக பகீர்மான குழாய் அமைக்க மன்ற தீர்மான எண். 178 நாள். 12.09.2016 ல் அனுமதி வழங்கப்பட்டது. இதற்கிடையில் திட்ட இயக்குநர் , மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை , கடலூர் அவர்களின் கடிதம் ந.க.எண். அ11/2439/16 நாள் . 03.08.2017 ல் தன்னிறைவு திட்டத்தில் முன் மொழிவு அனுப்பி வைத்திட கேட்டு கொண்டதற்கிணங்க நெல்லிக்குப்பம் நகராட்சி வார்டு எண்.**3** அப்துல் ரஹ்மான் நகரில் குடிநீர் பகீர்மான குழாய் பதித்தல் பணிக்கு ரூ.**2,10,000/–** மதிப்பீடு தயார் செய்து நிர்வாக அனுமதி கோரியும் இப்பணிக்கான மக்கள் பங்களிப்பு தொகையாக மதிப்பீட்டு தொகையில் மூன்றில் ஒரு பங்கு தொகை வீதம் ரூ. **70,000/–** க்கான வரைவோலையும் அனுப்பி வைக்கப்பட்டது. வரைவோலை அனுப்பி வைக்கப்பட்டு 6 மாத காலமாகியும் நிர்வாக அனுமதி வரப்படவில்லை . மேலும் பண்ருட்டி சட்ட மன்ற உறுப்பினர் இந்நகருக்கு குடிநீர் பகிர்மான குழாய் அமைத்திட கோரிக்கை விடுத்துள்ளார். எனவே அப்துல் ரஹ்மான் நகர் பொது மக்களின் நலன் கருதி குடிநீர் பகீர்மான குழாய் பதிக்க நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு. 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்கண்ட நகரில் **51** மனைகளுக்கு முறைபடுத்துதலுக்காக வசூல் செய்யப்பட்டுள்ள தொகை மற்றும் அந்நகர் வாழ் பொது மக்களின் பங்களிப்பு தொகையில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1667/2016/இ1)

**<u>மன்றபொருள் .11.</u>** சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பு சட்டம் 1986 (சட்ட எண்.29/1986)–இல் பிரிவு 3, 6 மற்றும் 25 களில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் மத்திய அரசு திடக்கழிவு மேலாண்மை பணிகளை முறைப்படுத்த திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016–ஐ இயற்றியுள்ளது. இந்த திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 அனைத்து நகராட்சிகளுக்கும் பொருந்தும். ஒவ்வொரு நகராட்சியும் தனது அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில் நகராட்சி கழிவுகளை சேகரித்தல், சேமித்தல், தரம்பிரித்தல், எடுத்துச் செல்லுதல், செயலாக்கம் மற்றும் இறுதியாக்கம் செய்தல் போன்ற பணிக்கான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த பொறுப்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும், திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016–இன் விதி 4–இல் குறிப்பிட்டுள்ளவாறு கழிவுகளை உருவாக்குபவர் அந்தந்த நகராட்சி நிர்வாகத்துடன் ஒருங்கிணைந்து கழிவுகளை கண்ட இடங்களில் கொட்டாமல் தவிர்க்கவும், கழிவுகளை தரம் பிரித்து நகராட்சியால் ஏற்படுத்தப்பட்டுள்ள முறைப்படி அப்புறப்படுத்தவும் பொறுப்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 அத்தியாயம் VIII பிரிவு 153, 156, 157, 158, 160 மற்றும் 161–ன் படி, நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் திடக்கழிவுகளை அகற்ற போதிய எற்பாடுகள் செய்யவும், திடக்கழிவு சேவையில் ஈடுபட்டு பொது சுகாதாரம் பேணி சுற்றுச் சூழலை பாதுகாக்கும் செலவினத்தை அதன் பொறுப்பாளர்களிடம் இருந்து பணம் வசூலித்து செயல்படுத்தவும் நச்சுத் தன்மை உடைய கழிவுகளையோ, அழுகிய

கழிவுகளையோ, மலக்கழிவுகளையோ, மருத்துவக்கழிவுகளையோ மாற்றம் செய்தல் சாலைகளில் போடுதல் மற்றும் வடிகால்வாய்களில் கொட்டுதல் ஆகியவை தடைசெய்யப்படுகிறது. மீறுவோர் மீது சட்டப்படி நடவடிக்கை மற்றும் அபராதம் விதிக்க வழிவகை செய்யப்பட்டு உள்ளது.

மேற்காணும் சட்ட விதிமுறைமுறைகளுக்குட்பட்ட, நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சாலைகள் சுத்தமாகவும், வடிகால்வாய் தங்கு தடையின்றி செயல்படவும், நிலத்தடி நீர் மற்றும் சுற்றுப்புற காற்றின் தரம் ஆகியவை மாசுபடுவதை தவிர்க்கவும், பொது சுகாதாரம் பாதுகாக்கவும் திடக்கழிவு மேலாண்மை திட்டம் கையாளுதல் விதிகள் 2016—ன்படி நகர் மன்ற ஆணையாளருக்கு திடக்கழிவு மேலாண்மை திட்ட செயல்பாட்டிற்கு தனிநபர் குடியிருப்புகள் மற்றும் வணிகர்களிடம் இருந்து திடக்கழிவு மேலாண்மை திட்டம் கையாளுதல் கட்டணம் வசூலிக்கவும் துணை விதிகளின் படி, நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளதால் கூட்ட தீர்மான எண் 18, நாள் 23.02.2017ம் தேதி அனுமதி வழங்கியுள்ளது. மேலும் பொது மக்கள் பார்வைக்கும் இந்நகராட்சி விளம்பர பலகையிலும் மற்றும் தினசரி தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழில் 01.03.2017ம் தேதியன்று விளம்பரம் செய்யப்பட்டது. அதை தொடர்ந்து 18.04.2017அன்று கலந்தாய்வு கூட்டம் நடத்தப்பட்டது. அதில் பொதுமக்கள், வணிக நிறுவனங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களிடமிருந்து ஆட்சேபனை கடிதம் ஏதும் வரப்படவில்லை. இவ்வறிவிப்பில் குடியிருப்புகளுக்கு சேவைக்கட்டணங்கள் எதுவும் விதிக்கப்படவில்லை மேற்கண்ட துணைவிதிகளின் படி குடியிருப்புகளுக்கும் சேவைக்கட்டணம் வசூலிக்கப்படவேண்டும்

28 ஜீன் 2017 கடலூர் மாவட்ட அரசிதழ் எண்.5 அரசு அறிவிக்கையின் படி நெல்லிக்குப்பம் நகராட்சி கட்டணங்களை மாற்றியமைக்க நகரமன்ற ஒப்புதலின் அடிப்படையில் கட்டணங்கள் நிர்ணயிக்கலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது எனவே குடியிருப்புகளுக்கு சேவை கட்டணங்களை கீழ் கண்டவிபரப்படி நிர்ணயிக்க அனுமதி வேண்டப்படுகிறது.

திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 விதி எண் 4(3)ன் படி திடக்கழிவுகளை உருவாக்குபவர்களிடமிருந்து வீடு வீடாக சேகரிக்க மற்றும் நகராட்சியின் வாகனம் மூலம் குப்பை கழிவுகளை அப்புறப்படுத்த குடியிருப்புகளுக்கு சேவைக்கட்டணங்கள் பின்வருமாறு நிர்ணயம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**குடியிருப்புகளுக்கு சேவைக்கட்டண விவரப்பட்டியல்**

| வ.எண். | பொருள் | காலம் | கட்டணம் ரூபாய் |
|---|---|---|---|
| 1. குடியிருப்பு | | | |
| i) | தனிநபர்குடியிருப்பு (சொத்துவரி ரூ.500க்குள்) | மாதம் ஒன்றுக்கு | 10 |
| ii) | தனிநபர்குடியிருப்பு (சொத்துவரி ரூ.501—1000 க்குள்) | மாதம் ஒன்றுக்கு | 15 |
| iii) | தனிநபர்குடியிருப்பு (சொத்துவரி ரூ.1001—2000க்குள்) | மாதம் ஒன்றுக்கு | 20 |
| iv) | தனிநபர்குடியிருப்பு (சொத்துவரி ரூ.2001 மேல்) | மாதம் ஒன்றுக்கு | 25 |

மற்றும்

| 3. வணிகம் | மாற்றியமைக்கப்பட்ட சேவைக்கட்டணம் | | |
|---|---|---|---|
| viii) | சிறிய மீன்/மட்டன் ஸ்டால் / சிக்கன் ஸ்டால் | மாதம் ஒன்றுக்கு | சிறியது / பெரியது 100 / 200 |

திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 மற்றும் துணை விதிகளில் குறிப்பிட்டுள்ளபடி மாவட்ட அரசு இதழில் அச்சிட்டு வெளியிடவும் மேலும் ,மேற்குறிப்பிட்டுள்ள கட்டணங்களை 01.05.2018 முதல் நடைமுறைபடுத்தவும் மன்றத்தின் பார்வை மற்றும் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:— மன்றம் ஒப்புதல் செய்யலாம்.

(ந.க.எண் 624/2017/எச்1)

**<u>மன்றபொருள் .12.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சியில் குடிநீர் நிதியின் கீழ் மன்ற தீர்மான எண். 30 நாள். 01.02.2018 ன்படி 28.03.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சிக்குட்பட்ட குடிநீர் பகீர்மான குழாயில் ஏற்படும் உடைப்புகள் மற்றும் மின் மோட்டார் ஆகியவற்றில் ஏற்படும் பழுதினை சீர் செய்து பராமரித்தல் பணி. | 8.50 | M/s.அருணாச்சல அசோசியேட் | **0.30%** மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு.K.N.முருகன் | **1.88%** மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட அதிகம் |

<u>அலுவலகக்குறிப்பு : –</u> 1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான **0.30 %** ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள . M/s.அருணாச்சல அசோசியேட் ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**(ந.க.எண் . 0518/2018/இ1)**

தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி.